247

TAMIL NADU LEGISLATURE LIBRARY
4-DEC 1979
MADRAS

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

புதன்கிழமை, 1979 மார்ச் 21

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

வினாக்கள்—விடைகள்.

(1) உடுக்குறியிட்ட வினாக்கள்.

கல்ராயன் மலைப்பகுதியில் கடுக்காய் எண்ணெய் ஆலை.

*குறுகிய கால வினா எண் 20—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்ராயன் மலையில் கிடைக்கும் கடுக்காயைக் கொண்டு எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் அங்கு எவ்வளவு கடுக்காய் கிடைக்கிறது? அதை எங்கு அனுப்புகிறார்கள்? அதை எதற்காகப் பயன் படுத்துகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, கடுக்காய் எண்ணெய் தொழிற்சாலையே அரசினுடைய பரிசீலனையில் இருந்து இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. மேலும் அரசினுடைய பரிசீலனையில் இது இருந்தால் தான் எவ்வளவு கடுக்காய் கிடைக்கும் என்றும், அதனால் எவ்வளவு வருமானம் வரும் என்றும் கணக்கிட்டுக் கூற முடியும். இந்தக் கடுக்காயிலிருந்து தோல் பதனிடுவதற்குத் தேவையான டேனின் என்ற பொருளை உற்பத்தி செய்யும்

தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்குத்தான் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தக் கடுக்காயைப் பயன்படுத்துவதற்குரிய யோசனை இல்லை என்று சொன்னார்கள். ஆனால் சூரியகாந்தியிலே இருந்து எண்ணெய் எடுப்பதைப்போன்று இந்த கடுக்காயிலே இருந்து எண்ணெய் எடுக்க முடியும் என்று நிபுணர்கள் கூறி இருப்பதாகத் தெரிய வருகிறது. கல்கத்தாவிலே கடுக்காயிலே இருந்து எண்ணெய் எடுக்கின்ற ஒரு தொழிற்சாலை அமைந்திருப்பதாகவும் அதே போன்று விருத்தாசலத்திலேயும் ஒரு பிரிவை அமைக்கலாம் என்றும் யோசனை இருப்பதாக அறிகிறேன். அந்த யோசனையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலமாக 26—12—1978 அன்று ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விருத்தாசலத்தில் இருக்கக்கூடிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் மூலமாக இவ்வாறு செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசீலிக்கலாம் என்பது குறித்துத் தெளிவாக அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விசைத்தறி தொழிலாளர் குறைந்த பட்ச ஊதியம்.

*வினா எண் 490—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விசைத்தறி தொழிலாளர்களுக்கென அரசால் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச சம்பள உத்தரவு பல நிறுவனங்களில் அமலாக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனை அமலாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?